

தி.மு. கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன். தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (05.10.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் 2024–25 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்களை அடையாறு நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எஸ்.அசன் மௌலானா, தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையாளர் திருமதி எம்.விஜயலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் ஜெ. ராஜமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.பானுமதி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி து.சுபாஷினி, தா.மோகன்குமார், திருமதி ம.ராதிகா, திருமதி க.விசாலாட்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமை!

# கொளத்தூர் கிழக்குப் பகுதியில் கழக முப்பெரும் விழா மாபெரும் புகழரங்கம்!

## டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., நடிகர்.பொன்வண்ணன், முனைவர். பர்வின் சுல்தானா, இரா.கிரிராஜன் எம்.பி., புகழுரைக்கின்றனர்!

சென்னை, அக்.6-

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்13வது நிகழ்ச்சியாக "பேராளிகள் தந்த திராவிடம்! இனமானம் காக்க போரிடும்! என்ற தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நாளை (07.10.2024) திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில், சென்னை82, பெரியார்நகர், திருவள்ளுவர் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சரிதாமகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி.பழனி, இளா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம்.தாவூத்பீ எம்.சி, எல்.டி.தாமஸ். கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.டி.சி.ரவி, பி.பொன்முடி, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், ப.அன்பரசு, டி.சந்திரசேகர், கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி, கே.சாரதா எம்.சி. கொளத்தூர் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: எல்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, எஸ்.பி.சதீஷ் பாபு, பி.வெங்கடேசன், ஜி.செல்வம், ஜி.பொன்னிவளவன், சி.சந்திரசேகர், புரசை.ஜி.ராமகிருஷ்ணன், பொன் புகழேந்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், நடிகர். பொன்வண்ணன், முனைவர்.பர்வின் சுல்தானா, இரா.கிரிராஜன் எம்.பி. கழக சட்டதிட்ட சீர்திருத்தக்குழு செயலாளர் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ., கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர் இரா.விடுதலை. கொளத்தூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி. கொளத்தூர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், செ.முருகன், என்.சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ்.

கொளத்தூர் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: ஆர்.ஆரோக்கியதாஸ், எம்.நாகராஜ், அ.கன்னியப்பன், டி.எ.ராஜன், ஆர்.மோகனசுந்தரம், எஸ்.சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவிசந்திரன், ஆர்.சொக்கலிங்கம், எஸ்.நாகராஜன், ஏ.எம்.ராஜசேகர், ஆர்.ஜெ.வெங்கடரமணமூர்த்தி. மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்: கொளத்தூர் கிழக்கு பகுதி: எம்.சத்யா, துரைவெங்கடேசன், ஆ.சு.அசோக்குமார், கே.எஸ்.சபரிநாத், வி.அருண்ராஜன், சொ.பழனி, எஸ்.சின்னராஜா, சட்டர்க.ஜெயபால், பி.பாஸ்கர், எஸ்.துளசிகுருபரன், எஸ்.மணிவண்ணன், எஸ்.சுகுமார், எஸ்.தினேஷ், வி.ஜெ.கஜேந்திரன், எஸ்.ஸ்ரீநாத், வெற்றி நகர் இ. சிவா, எஸ்.மதன், சி.வி. யோகராஜ், என்.வேலன், எ. முகம்மது இஸ்மாயில், ஜி. லட்சுமணன், டி.சரவணன், ஜி.எஸ்.பிரகாஷ், டி.ரமேஷ், எ.சதீஷ்குமார், எஸ்.டி.சீனிவாசன், பெ.குருநாதன், பிரவீன் சேட், மகாராஜன், என்.வேலன், சு.கி.ராஜ், கே.சதீஷ்பாலு, எம்.துரை, அருண்மனோகர், பி.சுரேஷ், கே.கங்காதரன், கௌரிகுருபரன், வி.பிரபாவதி, எஸ்.விஜயலட்சுமி, பெரியார் பிரியா, டி.தமிழ்செல்வி, யமுனாதேவி, த.ஹேமலதா, பி.முனுசாமி, உதயகுமார், ஜெகதீஷ், பிளம்பர் ஆறுமுகம், மல்லிபூநகர் சிவா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

68 அ வட்ட கழக செயலாளர் கே.பி.ஆதவன்மணி நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய

# ஊழியர்கள் முன்னேற்ற சங்க பொதுக்குழுக் கூட்டம்!

## மு.சண்முகம் எம்.பி. – பூச்சி எஸ்.முருகன் – கி.நடராசன் சிறப்புரை!

சென்னை, அக்.06-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் பொதுக்குழு கூட்டம் 19.10.2024, சனிக்கிழமை, காலை 10 மணிக்கு வசந்த பவன் ஹோட்டல், தெற்கு மாடவிதி, மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் மாநில பொதுச்செயலாளர் ந.சண்முகசுந்தரம் தலைமை வகிக்கிறார்.

எஸ்.கமலநாதன், எல்.கோகுல்ராஜ், என்.நந்தகோபால், டி.சுரேஷ்குமார், எஸ்.மனோஜ், ஆர்.பிரபு, ஆர்.செந்தில்குமார், கே.சுகுமார், ஏ.நடராஜன், எஸ்.ஆனந்தன், பி.யுவராஜ், கே.சாலமன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முத்துக்குமார், இ.தாஸ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி., தலைமை நிலைய செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மகளிர் குழு: திருமதி.எஸ்.விஜயலட்சுமி திருமதி. என்.லட்சுமி திருமதி.ஏ.ரசியா திருமதி.எம்.சசிகலா திருமதி. ஜெ.மலர்விழி திருமதி. எஸ்.சித்ராதேவி

தொழில் நுட்பக் குழுவினர்: ஆர்.சீனிவாசன் எஸ்.தினகரன் ஆர்.யோகேஷ்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொள்கின்றனர்.

அமைப்புச் செயலாளர் கே.முருகன் நன்றியுரையாற்றுகிறார்.

இதில் பொதுக்குழு, செயற்குழு மற்றும் சிறப்பு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




சென்னை, தரமணியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை வளர்க்கும் விதமாக "நல்லோசை சமூக ஆய்வகங்களை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளார் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி. இரா. உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட

# குழந்தைகள் - பச்சிளம் குழந்தைகளுக்கு நலத்திட்டங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.10.2024) சென்னை, அடையாறு, சமுதாய நகர்ப்புற நல மருத்துவமனையில், 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்களை தொடங்கி வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**குழந்தை நல திட்டங்கள்!**

2024-25-ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வுத்துறையின் மானியக்கோரிக்கை அறிவிப்பில், 110 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்ட 110 அறிவிப்புகளில் தொடர்ச்சியாக ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்று 4 அறிவிப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. அவை தமிழ்நாட்டில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் பிறவிக் குறைபாடுகளை கண்டறிந்து முழுமையான பரிசோதனைகளை செய்வதற்கு Head to Toe Examination என்கின்ற வகையில் அரசு மருத்துவமனைகளில் ஏறத்தாழ 1000 இடங்களில் பரிசோதனைகள் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அனைத்து குழந்தைகளுக்கும் பிரத்யேக அடையாள அட்டைகள் (Child Health Card) இந்த 1000 மருத்துவமனைகளில் தரும் இத்திட்டத்தை இங்கிருந்து செயல்படுத்துகிறோம். பச்சிளங்குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலத்தினை கண்காணிக்கும் பொருட்டு சிறப்பு மையங்கள் (Well Baby Clinic) 400 இடங்களில் இம்மையங்கள் தொடங்கி வைத்திருக்கிறோம். இதன் மூலம் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பிறவிக் குறைபாடுகள் கண்டறிவது, ஆரம்ப கட்டங்களில் கண்டறியப்பட்ட குறைபாடுகளுக்கு தீர்வு காண்பது, வளர்ச்சிக்குறைபாடுகள், செவிதிறன் குறைபாடுகள், பார்வைக் குறைபாடுகள் போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அக்குழந்தைகள் இயல்பாக வளர்வதற்கும், வாழ்வதற்கும் இத்திட்டங்களை இன்று தொடங்கி வைத்திருக்கிறோம்.

மேலும் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் "சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவிலிருந்து விடுவிக்கப்படும் குறைப் பிரசவம் மற்றும் எடை குறைவான பச்சிளம் குழந்தைகளை தொடர்ந்து அவர்களது இல்லங்களிலேயே தொழில் நுட்ப உதவியோடு கண்காணிப்பதற்கான முன்னோடித் திட்டம் சென்னை, செங்கல்பட்டு, கடலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்" என்ற அறிவிப்பின்படி இந்த திட்டம் இன்று தொடங்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் எடை குறைவாக பிரசவிக்கும் குழந்தைகளுக்கு வீட்டில் இருந்தபடியே குழந்தையின் சுவாசம், இதயத்துடிப்பு போன்றவற்றை 24 மணி நேரமும் மருத்துவர்கள் மற்றும் பெற்றோர்களால் கவனிக்க முடியும். கருவி மூலம் மருத்துவர்களுக்கு அபாய எச்சரிக்கை வரும்போது எளிதில் பாதிக்கப்பட்ட குழந்தையை கண்டறிந்து தேவையான சிகிச்சையை விரைவாக அளிக்க முடியும்.

**யோகா மற்றும் இயற்கை மருத்துவம்!**

ரூ.1.74 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பான மற்றும் சுகப்பிரசவத்தினை ஊக்குவிக்கும் வகையில், இந்திய மருத்துவ முறையுடன் ஒருங்கிணைந்து, செவிலியர்களுக்கு விரிவான மகப்பேறு பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி இந்த திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. ஆரோக்கியமான கர்ப்பக்கால மற்றும் பாதுகாப்பான பிரசவத்தை உறுதிப்படுத்தும் வகையில் செவிலியர்களுக்கு யோகா மற்றும் இயற்கை மருத்துவம் சார்ந்த விரிவான மகப்பேறு பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டுவருகிறது. மேலும் தாய்மார்கள் யோக பயிற்சி கையேட்டில் குறிப்பிட்டுள்ள ஆலோசனையை பின்பற்றுவதன் மூலம் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை ஊக்குவித்தும் பிரசவத்தினை எளிதாக்கவும் வழிவகை செய்யும் திட்டம் தற்போது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

**பெற்றோர் பயன்பாட்டு செயலி!**

ஆரம்பகால குழந்தை வளர்ச்சிக்கான "பெற்றோர் பயன்பாட்டு செயலி" உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின்படி இந்த திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பெற்றோர் பயன்பாட்டு செயலியினால் சுகாதாரச் செய்திகள்/கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து செய்திகள், கர்ப்பம் மற்றும் பிரசவ காலம் பற்றிய செய்திகள், பிரசவத்திற்கு பின் கவனிப்பு மற்றும் பிறந்த குழந்தையின் வளர்ச்சியைப் பற்றிய கண்காணிக்கவும், குழந்தை பராமரிப்பு பற்றி தெரிந்து கொள்ளுதல் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை அறிதல் போன்ற அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளலாம். மேலும் கர்ப்பம் மற்றும் பிரசவ காலத்தில் ஏற்படும் சிக்கல்களை கண்டறிந்து உடனடியாக பரிந்துரை செய்து தாயின் உயிரினை காப்பதற்கும் இந்த செயலி வழிவகை செய்யும்.

**இறப்பு விகிதம் குறைப்பு!**

தமிழ்நாடு குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்து நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதில் தேசிய அளவில் முன்னணி மாநிலமாக திகழ்கின்றது. 2020-ஆம் ஆண்டு மாதிரி பதிவு முறையின் படி தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் 1 ஆயிரம் பிறப்புகளுக்கு 13 ஆக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு குழந்தை நலத் திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம், 1000 பிறப்புகளுக்கு 10.2 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 8.0 ஆக குறைந்துள்ளதாக தற்போதைய ஏப்ரல் 2024 ஆகஸ்ட் 2024 சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (HMIS) அறிக்கை தெரிவிக்கின்றது. இத்திட்டங்கள் மேற்கொள்வதன் மூலம் குழந்தை இறப்பு விகிதம் மேலும் குறைக்கப்படும். மேலும் குழந்தை இறப்பு விகிதம் (1000 பிறப்புகளுக்கு) தமிழ்நாட்டில் 13 இந்திய அளவில் 28 என்கின்ற அளவில் இருக்கின்றது. மகப்பேறு மரணம் (1 இலட்சம் மகப்பேறுக்கு) தமிழ்நாடு அளவில் 40.2 என்கின்ற அளவிலும், இந்திய அளவில் 97 என்கின்ற நிலையில் உள்ளது. எனவே இந்திய அளவில் காட்டிலும் தமிழ்நாடு சிசு இறப்பு விகிதம் குறைவாக உள்ளது. இந்த இரண்டு இறப்பு விகிதங்களும் பூஜ்ஜியம் நிலைக்கு செல்வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த 4 புதிய திட்டங்களும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**DPT முத்தடுப்பூசி தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் கேள்விக்கு பதில்**

DPT முத்தடுப்பூசி தமிழ்நாட்டில் 2024-25-ஆம் ஆண்டில் 8.79 இலட்சம் 16 மாதம் முதல் 24 மாதம் வரை குழந்தைகள் மற்றும் 9.35 இலட்சம் ஐந்து வயது குழந்தைகள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது ஓராண்டிற்கு 20.15 இலட்சம் தடுப்பூசிகள் ஓராண்டிற்கு வேண்டும். தடுப்பூசி எதுவாக இருந்தாலும் ஒன்றிய அரசு வழங்குவதுதான். 13 வகையான தடுப்பூசிகள் நாம் பயன்படுத்தி வருகிறோம். நமக்கு 5 இலட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் இருந்தது. தடுப்பூசிகள் காலியாகும்போது 3 கடிதங்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையிடமிருந்து ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தடுப்பூசி இருப்பு குறைந்து வருகிறது, எனவே DPT தடுப்பூசிகளை உடனடியாக அனுப்ப வேண்டும் என்று 2.07.2024, 2.09.2024, 18.09.2024 ஆகிய 3 நாட்களில் ஒன்றிய அரசிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து நாங்கள் கண்காணித்து வருகிறோம். அந்த வகையில் ஒன்றிய அரசு 20 இலட்சம் தடுப்பூசிகள் தர வேண்டும், இது வரை 9 இலட்சம் தடுப்பூசிகள் தந்திருக்கிறார்கள், எடப்பாடி பழனிசாமி சொல்வது தவறு, அவர் எந்த மருத்துவமனைகளில் சென்றும் பார்த்துக்கொள்ளலாம், தற்போது 3.26 இலட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது.

**டெங்கு பாதிப்பு தொடர்பான கேள்விக்கு**

ஒவ்வொரு பருவமழைக் காலங்களிலும் காய்ச்சல் வருவது இயற்கையானது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் தொடங்க உள்ளது. டெங்கு பாதிப்பு உலகம் முழுவதும் உள்ளது. நான் ஏற்கெனவே சொன்னது போலவே அதிகமான டெங்கு இறப்புகள் தமிழ்நாட்டில் எடுத்துக் கொண்டால் 2012-ஆம் ஆண்டு 66 இறப்புகள், 2017-ஆம் ஆண்டு 65 டெங்கு இறப்புகள் ஏற்பட்டிருக்கிறது. அதன்பிறகு டெங்கு பாதிப்புகள் ஓரிலக்கத்தில் தான் பதிவாகி உள்ளது. அரசு மருத்துவமனைகளில்தான் டெங்கு பாதிப்புகள் வெளியிடப்பட்டிருந்தது. தனியார் மருத்துவமனைகளில் அந்தளவிற்கு கவனிக்கப்படவில்லை கடந்த காலங்களில் முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் அனைத்து மருத்துவமனைகளிலும் டெங்கு பாதிப்புகள் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு டெங்கு பாதிப்பு சற்று உயர்ந்து வந்தநிலையில் ஊரகவளர்ச்சித்துறை, நகராட்சித்துறை, மக்கள்நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் மாவட்ட அளவிலான கூட்டம் நடத்தி டெங்கு கட்டுப்படுத்துவது, டெங்கு இறப்பு கட்டுப்படுத்துவது என்கின்ற அளவில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அதில் 500க்கும் மேற்பட்ட 3 துறைகளைச் சார்ந்த உயரலுவலர்கள் கலந்து கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு பாதிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, டெங்குவின் வீரியத்தை கண்டுபிடிப்பது தொடர்பான ஆய்வகம் இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில் பகுப்பாய்வகம் அமைத்திருக்கிறோம். அமெரிக்காவில் இருந்து வேதிப்பொருட்கள் கொண்டு வந்து பகுப்பாய்வு செய்தவற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. ஆகையால் டெங்கு விழிப்புணர்வு என்பது தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இது வரை இந்த ஆண்டில் டெங்கு இறப்பு என்பது 7ஆக உள்ளது. இந்த இறப்புகள் கூட நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவாக இருந்ததனால் ஏற்பட்டது.

மேலும் மருத்துவமனைகளுக்கு வராமல் வீடுகளிலேயே சிகிச்சை பெறுவது போன்ற காரணங்களினால் தான் 7 இறப்புகள் வந்திருக்கின்றது. கடந்த கால ஆட்சியில் டெங்கு குறித்த கவலைகள் இல்லாத காரணத்தினால்தான் டெங்கு இறப்பு 60 என்கின்ற அளவில் இருந்தது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர். வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் திருமதி.விஜயலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ஜெ.ராஜமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர்.சாந்தகுமாரி, மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாநகர நல அலுவலர் டாக்டர்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர்.பானுமதி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சுபாஷினி, மோகன்குமார், திருமதி.ராதிகா, திருமதி. விசாலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.